## நேதாஜி மார்க்கெட்டில் முதல் மாடி கட்டித்தருக!

# வேலூரில் பாதாள சாக்கடை திட்டத்தை விரைந்து முடித்திடுவீர்!

## பேரவையில் ப.கார்த்திகேயன் வலியுறுத்தல் !

**சென்னை, ஜீலை 1-**

**தமிழக சட்டப்பேரவையில்பேரவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் ப.கார்த்திகேயன் பேசும்போது, வேலூர் நகரில் 10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து முடிக்க வலி யுறுத்தினார்.**

வேலூர் ப. கார்த்திகேயன் பேசியது வருமாறு:-

நம்முடைய பெரியாரை வணங்கி, பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, அண்ணா அவர்களின் தம்பியாக வாழ்ந்து அவர் பக்கத்திலேயே உறங்கிக் கொண்டிருக்கின்ற என் தலைவரை வணங்கி, முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்கி, நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

திருவண்ணாமலை மாவட்ட கழகத்தின் செயலாளரும், பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்குகிறேன்.

ராணிப்பேட்டை மாவட்ட கழகத்தின் செயலாளரும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

வேலூர் மாவட்ட கழகத்தின் செயலாளரும், அணைக்கட்டு தொகுதியின் சட்டமன்றப் பேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் அவர்களை வணங்கி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களை வணங்கி, அரசு தலைமைக் கொறடா அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

எனது வேலூர் தொகுதி மக்களின் சார்பாக, அறநிலையத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய கழகத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த தேர்தலில், 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நாட்டு மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, தமிழ்ச் சமுதாய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, சிறுபான்மையின மக்களுக்கு என அனைவருக்காகவும் அயராது உழைத்த காரணத்தினால்தான், இந்நாட்டு மக்கள் 40 தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்தார்கள்.



(மேசையைத் தட்டும் ஒலி)

இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை, ஏழை எளிய மகளிர் நகரப் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளலாம் என்று அறிவித்தவர் நம்முடைய தலைவர் அவர்கள். இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும் 48, நகைக்கடன் தள்ளுபடி என பல திட்டங்கள். இந்த computer உலகத்தில் ஏழை மக்களின் பெண் குழந்தைகள் அனைவரும் +2 படித்துவிட்டால், உயர் கல்வியைப் படிப்பதற்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் புதுமைப் பெண் திட்டம் அறிவித்தார். இந்த ஆண்டு முதல் மாணவர்களும் பயன்பெறும் வகையில், 'தமிழ் புதல்வன்' என்ற பெயரில் இத்திட்டத்தை அறிவித்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அது மட்டுமல்ல. ஏழையெளிய மக்கள், சாதாரண கூலித் தொழில் செய்யும் மக்களின் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை அறிவித்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் 2019 ஆம் ஆண்டில் 8,500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நாம், 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 2 இலட்சத்து 15 ஆயிரத்து 712 வாக்குகள் வித்தியாசத்தில் சகோதரர் கதிர் ஆனந்த் அவர்கள் வெற்றி பெற்றிருக் கிறார் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நமது முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக உழைத்து, பல திட்டங்களை செயல்படுத்திய காரணத்தினால்தான் வெற்றி பெற்றோம்.

அறநிலையத் துறை குறித்து, என் தலைவர் கலைஞர் அவர்கள், 1952 ஆம் ஆண்டிலேயே பராசக்தி படத்தில் கதை, வசனம் எழுதியிருக்கிறார். அதில் 'கோவில் கூடாதென்பதற்காக அல்ல; அது கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதற்காக' என்று சொன்னார். அதனடிப்படையில்தான், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 33 அமைச்சர்களை அறிவித்தாலும், அறநிலையத் துறைக்கு யாரை நியமிக்க வேண்டும் என்று சிந்தித்து, அண்ணன் சேகர் பாபு அவர்களை நியமித்தார்கள். அவ்வாறு நியமித்த காரணத்தினால் தான், நமது மாநிலத்தில் ஆக்கிரமிப்பில் இருந்த சொத்துகளையெல்லாம் மீட்டிருக்கிறார். இந்த 3 ஆண்டுகளில், 6 ஆயிரத்து 804 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகளை மீட்டிருக்கிறார் என்று சொன்னால், அதுதான் இந்த அறநிலையத் துறையினுடைய வரலாறு.

அதுபோல செய்த காரணத்தால்தான் இன்றைக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையைப் பார்த்தீர்களென்று சொன்னால், இந்தியாவிலேயே சிறந்த முறையில் இருக்கிறது என்று சொன்னால் தமிழ்நாடு அறநிலையத் துறைதான் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு சிறப்பு சேர்த்திருக்கிறார் அமைச்சர் அவர்கள். அதேபோல், 1000 ஆண்டு கோயில்களுக்கு எல்லாம் இந்த ஆண்டு 2024-2025க்கு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த 3 ஆண்டுக் காலத்தில் 100 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்.

அடுத்து, கோயில்களுக்கு எல்லாம் குடமுழுக்கு விழா. நமது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த 3 ஆண்டுக் காலத்தில், 1,810 கோயில்களுக்கு குட முழுக்கு விழா நடைபெற்று இருக்கிறது. அதுமட்டுமல்ல, நிறைய கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. எல்லோருக்கும் அனுமதியைக் கொடுத்து திருப்பணிகள் தொடர்ந்து எல்லாக் கோயில்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற அதிமுக ஆட்சி காலத்தில் 10 ஆண்டு காலத்தில் 2 கோயில்களுக்குத்தான் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த 3 ஆண்டுக் காலத்தில் 8 கோயில்களுக்கு அன்னதானத் திட்டத்தைத் முதலமைச் சர் அவர்கள் கூறி நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் எல்லா இடத்திலும். நம்முடைய ஆதிநாராயணன் கோயில். அண்ணன் அவர்கள் பேசினார். யாருமே ஆதிநாராயணன் கோயிலுக்கு கேட்கவில்லை. ஒரு கோயிலுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் 1,250 கோயிலுக்கு 25 கோடி ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சார்பில் ஒதுக்கித் தந்திருக்கிறார்.

அதேபோல், கிராமப்புறக் கோயிலுக்கு 1,250 கோயிலுக்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் 25 கோடி ரூபாயை அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் சார்பில் ஒதுக்கித் தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். எல்லோரும் ஏதோ செய்தார்கள் வந்தார்கள் போனார்கள்.

**கோயில்களில் தமிழில் அர்ச்சனை!**

48 கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை இந்த அரசு நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார் என்று சொன்னார் இதுதான் சாதனை

எத்தனையோ கோயில்களுக்குச் செல்கிறோம் சாமி கும்பிடுகிறோம், வருகிறோம். ஆனால், அன்னைத் தமிழில் அர்ச்சனை என்று 48 கோயில்களில் தமிழ்நாட்டில் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால் இதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை உங்களிடத்திலே எடுத்துச்சொல்கிறேன்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் 10 அறநிலையக் கல்லூரி. அந்த அறநிலையக் கல்லூரியைப் பார்த்தீர்களென்று சொன்னால் 13,066 மாணவச் செல்வங்கள் படிக்கிறார்கள். அதற்கு ஆசிரியப் பெருமக்களைப் பார்த்தீர்களென்று சொன்னால் 524 ஆசிரியப் பெருமக்கள் பணிபுரிகிறார்கள் என்று சொன்னால் அறநிலையத் துறையின் சார்பில் மாணவச் செல்வங்களுக்கு எந்த அளவுக்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் செய்கிறார்.

அறநிலையத் துறையின் சார்பில் திருமண உதவி, எல்லாக் கோயில்களிலும் திருமணம் நடக்கிறது. 4 கிராமில் தங்கம், 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள bureau, கட்டில், watch எல்லாம் கொடுக்கிற ஆட்சி இது.

9 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 7 கோயில்களில் தங்கும் விடுதி, 8 இடங்களில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டிலே ஒரு கால பூஜை நமது அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று, 15 ஆயிரம் கோயில்களில் ஒரு கால பூஜை சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அடுத்து முடி காணிக்கை அளிப்பது இலவசமாக எத்தனையோ பேர் ஆட்சியில் இருந்தார்கள் நம்முடைய தளபதி அவர்கள் ஆட்சியில் தான் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்தில்தான் இந்த 3 ஆண்டுக் காலத்தில் முடிக் காணிக்கையை இலவசமாகத் தந்துவிட்டோம். அந்தக் காணிக்கை கட்டுவதற்குக் கூட பணம் இல்லாத ஏழை மக்கள் இருக்கிறார்கள். முடி காணிக்கையை இலவசமாக அளித்தது நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

அதேபோல், கோயில்களைத் தூர்வார வேண்டும். தமிழ்நாட்டில் check dam போன்றவற்றைச் செய்கிறோம். ஆனால் கோயில்களிலும் தூர்வாராமல் எத்தனையோ கோயில்கள் பாழடைந்துபோய் இருக்கின்றன. அதையும் 40 கோயில்களைப் புனரமைத்து நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 35 கோடி ரூபாயிலே அந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்.

அதேபோல், ஆன்மீக புனிதப் பயணம். ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் வயதில் முதியவர்களை ஆன்மீகப் பயணம் அனுப்புவதற்கு நம்முடைய இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதேபோல், திருத்தேர். 32 கோயில்களில் 34 தேர், 20 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் அந்தத் தேர்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் செய்து தருகிறார்.

மகா சிவராத்திரி இது வரை யாருமே செய்யாத சாதனை 10 ஆண்டுக் கால அதிமுக ஆட்சியில் நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால் நாங்கள்தான் சாமி கும்பிடுவோம்தேர்தல் வாக்குறுதியிலே சொன்னார்கள். திமுக ஆட்சிக்கு வந்தால் கோயில்கள் அனைத்தும் மூடிவிடு வார்கள். சாமியே கும்பிட மாட்டார்கள் என்று சொன்னார்கள். மகா சிவராத்திரி ஏற்பாடுசெய்து நானே திருவண்ணா மலையில் மைக்செட் மற்றும் light போட்டிருக்கிறேன். இலட்சக்கணக்கான மக்கள் மகா சிவராத்திரிக்கு மாலை 6 மணிக்குத் தொடங்கி நாதஸ்வரம், பரதநாட்டியம், இசைக் கச்சேரி. மாலை 6 மணிக்குத் தொடங்கி காலை 6 மணி வரையிலும் சிவராத்திரி இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் தொடர்ந்து நடைபெற்றது என்பதை உங்களிடத்திலே சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

வேலூர் மாநகரத்தில் என்னுடைய தொகுதியில் ஆரணி சாலையில் திரெளபதி அம்மன் கோவில் 300 ஆண்டுகளுக்குமேல் உள்ள பழமையான கோவில். சாலைகள் உயரமாக உயரமாக ஆனதால் 5 அடி, 6 அடி பள்ளத்தில் வந்துவிட்டது. அந்தக் கோவிலை நாங்கள் திருப்பணி செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டு, அறநிலையத் துறை சார்பில் எல்லா அனுமதியையும் தந்துவிட்டார்கள். அது கருங்கல் திருப்பணி. 3 கோடி ரூபாய்க்குமேல் செலவாகிறது. அண்ணன் அவர்கள், . . . (குறுக்கீடு)

மாதம் இலட்சம் ரூபாய்க்கு மேல் அதில் வருமானம் வருகிறது. அதைச் செய்து தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில், . . .

Government Pentland hospital என்று ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதை முழுமையான மருத்துவமனையாக உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, அதைச் செய்யவில்லை. நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 198 கோடி ரூபாய் நிதியொதுக்கித் தந்து, Multi Speciality hospital ஆக உருவாக்கித் தந்து அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, நேத்தாஜி மார்க்கெட் சாத்தமலைக்குப் பின்புறம் இருக்கிறது. நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதில் ஒரு floor மட்டும் கட்டித் தாருங்களென்று சொல்லியிருக்கிறேன். அதையும் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பாதாள சாக்கடை திட்டம்!**

வேலூர் மாநகரத்தில் சித்ரா பௌர்ணமி நடக்கிறது. 10 புஷ்பப் பல்லக்கு வருகிறது. அது வரும்போது இரவு 10 மணிக்கு மின்சாரத்தை நிறுத்தி விட்டார்களென்றால், காலையில் 10 மணிக்குமேல்தான் தருகிறார்கள். அந்தப் பகுதியிலே underground cable அமைத்துத் தர வேண்டுமென்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டம் 8 ஆண்டுகாலம், 10 ஆண்டுகாலமாகிவிட்டது. இன்னும் பணிகள் முடியவில்லை. அதையும் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**சுரங்கப்பாதை:** வேலூர் வெங்கடேஸ்வரா பள்ளியில் மாணவச் செல்வங்கள் அப்படியும், இப்படியும் போகிறார்கள். அங்கு ஒரு சுரங்கப்பாதை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். தொரப்பாடி பகுதியில் நம்முடைய forest இடம் இருக்கிறது. அதிலே mini உயிரியல் பூங்கா அமைத்துத் தர வேண்டுமென்று வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதனை அவைக்குறிப்பில் நான் பேசியதாகப் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவருக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி கூறி, அமைகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## குடிநீரில் கழிவுநீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை தேவை!

# தியாகராயர் நகர் 141வது வார்டில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி கட்டித்தரப்படுமா?

## சட்டப்பேரவையில் உறுப்பினர் ஜெ. கருணாநிதி கேள்வி!

சென்னை, ஜுலை 1-

சட்டப்பேரவையில் தியாகராயர் நகர் தொகுதி கழக உறுப்பினர் ஜெ.கருணாநிதி எழுப்பிய கேள்வியும், அமைச்சர் கே.என். நேரு அளித்த பதிலும் வருமாறு:-



**ஜெ. கருணாநிதி:** தியாகராய நகர் தொகுதி, 141வது வார்டு, முத்துரங்கன் சாலையில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.என். நேரு:** திருத்திய விடையை அளிக்க அனுமதி கோருகிறேன். சென்னை பெருநகரில், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 141ல் உள்ள 57 தெருக்களில் 74 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். முத்துரங்கன் சாலைக்கு தென் சென்னை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் தற்போது காலை 300 மணி முதல் காலை 600 மணி வரை வழங்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் குடிநீர் கட்டமைப்புகளை மேம்படுத்த 24X7 முறையில் குடிநீர் நேரடியாக வீட்டு இணைப்புகளுக்கு வழங்க விரிவான திட்ட அறிக்கையை ஒடிசா நீர் நிறுவனம்மூலமாக தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி முடியும்போது முத்துரங்கன் சாலை பகுதியில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது, அனைத்து தெருக்களிலும் சம அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியமில்லையென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனினும், உறுப்பினர் அவர்கள் தேவைப்படும் என்று சொன்னால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

**ஜெ. கருணாநிதி:** தியாகராயர் நகர் தொகுதி, 141வது வார்டு, கண்ணம்மா பேட்டை பகுதியில் நீண்ட காலமாக குடிநீர் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இப்போது லாரிகள் மூலமாகத்தான் குடிநீர் supply செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நீண்ட கால கோரிக்கையாக அந்த மக்கள் வைத்திருக்க கோரிக்கை முத்துரங்கன் சாலை பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தால், ஏனென்றால் இது கடைசி point. வள்ளுவர் கோட்டத்திலிருந்து வருகிற தண்ணீர் கடைசி point ஆக இருப்பதால், தண்ணீர் அந்தப் பகுதியில் சரியாக வரவில்லை. எனவே, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க முடியுமா என்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** துறையினுடைய அதிகாரிகள் ஒடிசா நீர் நிறுவனத்தோடு ஆலோசித்து, 24 மணி நேரமும் தண்ணீர் கொடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள், நீண்ட காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அவசியம் தேவைப்படும்பட்சத்தில் உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அங்கு கட்டித் தரப்படும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. உடனே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஜெ. கருணாநிதி:** தியாகராய நகர் தொகுதி முழுவதும் குடிநீரில் கழிவுநீர் கலக்கும் பிரச்சினை உள்ளது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் pumping stationஐ சரியாக இயக்க முடியாத காரணத்தினாலும், பெரும்பாலும் அந்த chamberகளெல்லாம் கட்டி 50 ஆண்டுக் காலம் ஆகின்றன. இப்போது மக்கள் தொகை அதிகமாக உள்ளது. 50 ஆண்டுக் காலம் ஆகிவிட்டதால் அந்த chamberகளெல்லாம் பழுதடைந்து விட்டன. Chamberல் இப்போது செங்கற்கள் எதுவுமே இல்லை. Chamberல் தண்ணீர் வந்து, குடிநீரில் கலந்து வருவதால் நிறைய இடங்களில் தியாகராயர் நகர் தொகுதியில், குறிப்பாக 7 வார்டுகளில் இந்தப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, புதிய கழிவுநீர் பாதையை மாற்றி, புதிய Chamberகள் அமைத்து, சீரமைக்க வேண்டுமென அமைச்சர் அவர்களை, கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் metro water department (Chennai Metropolitan Water Supply and Sewerage Board) சென்னை குடிநீர் வழங்கல் துறைக்கு கிட்டத்தட்ட 900 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தியாகராயநகர் பகுதியிலே கழிவுநீர் கலப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இன்றோ, நாளையோ, ஆணையர் அவர்களும், அதிகாரிகளும் அங்கு சென்று எந்த இடத்தில்கழிவுநீர்கலக்கின்றதோ அதை உடனடியாக சரி செய்யவும், மிகவும் பழுதடைந்த குழாய்களாக இருந்தால் அதை மாற்றவும், குடிநீரை நல்ல முறையில் கொடுப்பதற்குரிய அனைத்து முயற்சிகளும் உடனே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் ச. தியாகராஜன்

### ஜுலை 1 (2006)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்

நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். கலைச்செல்வன்

### ஜுலை 1 (2018)



இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தீவிர கழகப் பணியாற்றியவர்.

தேனி மாவட்டம், காக்கில் சிக்கையன்பட்டி கிளைச் செயலாளர், ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, கம்பம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**